FWC

# வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும் தவணைப் பரீட்சை, மார்ச் - 2020

**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, March - 2020**

| தரம் :- 12 (2021) | கர்நாடக சங்கீதம் | நேரம் :- 3.00 மணித்தியாலம் |
|---|---|---|

## பகுதி I

❖ **சரியான விடையினைத் தெரிவு செய்க.**

01. “தஞ்சம் என்றலே” என்ற தானவர்ணம் அமைந்துள்ள இராகம்.
1) பிலகரி 2) ஸ்ரீறஞ்சனி 3) ஆபோகி 4) சாவேரி 5) மத்தியமாவதி

02. துவி அன்னியஸ்வர பாஷாங்க ராகத்திற்கு ஓர் உதாரணம்
1) பிலகரி 2) காம்போதி 3) காபி
4) அடானா 5) பைரவி

03. 7வது சக்கரத்தின் பெயர்.
1) ரிஷி 2) ஆதித்ய 3) வேத 4) ருது 5) வசு

04. ஆரபி மானம் எனும் இராகமாலிகையில் இடம் பெறும் தாய் ராகம்.
1) ஆனந்த பைரவி 2) சங்கராபரணம் 3) பைரவி
4) பூர்வ கல்யாணி 5) கல்யாணி

agaram.lk

05. 72 மேளகர்த்தாவில் பவப்பிரியா, சுவர்ணாங்கி திவ்யமணி ஆகிய இராகங்கள் இடம்பெறும் சக்கரம்.
1) வசு 2) அக்னி 3) திஸி 4) பாண 5) ருத்ர

06. 1) சூட என்ற கன்னடச் சொல்லில் இருந்து தோன்றியது.
2) தாதுவின் அமைப்பில் கீதத்தினை ஒத்தது.
3) ஆரம்பத்தில் புரந்தரதாசரால் கன்னட மொழியில் இயற்றப்பட்டது.
4) இராக தாள மாலிகையாகவும் சில காணப்படும்.
மேற்கூறிய கூற்றுக்களுக்குப் பொருத்தமான உருப்படி வகை.
1) பதம் 2) இராகமாலிகை 3) சூளாதி 4) கிருதி 5) ஜாவளி

07. வசந்தா இராகத்தின் மத்திமத்தினைக் கிரக பேதம் செய்யும் போது தோன்றும் இராகம்.
1) ஆனந்தபைரவி 2) ரமணி 3) கமாஸ்
4) சாமா 5) ரீதிகௌளை

08. சமஷ்டி சரணம் அமைந்த கிருதிகளில் இடம் பெறாத அங்கம்.
1) பல்லவி 2) அனுபல்லவி 3) உபபல்லவி
4) சரணம் 5) அனுசரணம்

09. ஆனந்த பைரவி இராகத்தில் இடம் பெறும் அன்னியஸ்வரங்கள்
1) பிரதி மத்திமம், சுத்த மத்திமம்
2) அந்தர காந்தாரம் சுத்த தைவதம்
3) சுத்த ரிஷபம் அந்தரகாந்தாரம்
4) சுத்த நிஷாதம், அந்தரகாந்தாரம்
5) காகலிநிஷா தம், அந்தர காந்தாரம்

10. 72 மேளகர்த்தாவில் நான்காவது சக்கரத்தில் வரும் 3 வது இராகம்.
1) சூர்ய காந்தாரம்
2) நடபைரவி
3) கீரவாணி
4) கரகரப்பிரியா
5) மேசகல்யாணி

11. 'ஞானம் அருள்வாய்' என்ற கீர்த்தனை அமைந்துள்ள இராகம்.
1) மோகனம்
2) அம்சத்வனி
3) பிலகரி
4) சண்முகப்பிரியா
5) ஸ்ரீறஞ்சனி

12. இசைக் கச்சேரியில் பயன்படுத்தப்படும் உபதாள வாத்தியங்களில் ஒன்று.
1) வயலின்
2) புல்லாங்குழல்
3) கடம்
4) தாளம்
5) தம்புரா

13. "பொன்னும் மெய்ப்பொருளும்" என்ற தேவாரம் அமைந்து உள்ள பண்ணம் இணையான இராகம் யாது?
1) தக்கேகி – காம்போதி
2) நட்டபாடை – கம்பீரநாட்டை
3) பழம் பங்சுரம் சங்கராபரணம்
4) நட்டராகம் சலநாட
5) சதாரி பந்துவராளி

14. ஸகம தநிஸ் - ஸ்நிதமகஸ என்ற ஆரோகண அவரோகணத்தை உடைய இராகம்.
1) சாமா
2) சாரங்கா
3) தேஷ்
4) ஹிந்தோளம்
5) சாவேரி

agaram.lk

15. மகாநாடக வீணை என அழைக்கப்படுவது
1) தம்புரா
2) கோட்டு வாத்தியம்
3) வீணை
4) கடம்
5) வயலின்

16. புரந்தரதாஸரைத் தொடர்ந்து கீதங்களை இயற்றிய வாக்கேயகாரர்.
1) பைடால குருமூர்த்தி சாஸ்திரிகள்
2) திருவொற்றியூர் தியாகராஜர்
3) சுவாதித்திருநாள்
4) வீணைக்குப்பையர்
5) சோபனாத்ரி

17. கர்நாடக இசைக் கச்சேரியில் பிரதானமாக வாசிக்கப்படும் வாத்தியங்கள்.
1) வயலின், கடம்
2) மிருதங்கம், தபேலா
3) வீணை, கடம்
4) புல்லாங்குழல், வயலின்
5) வயலின் மிருதங்கம்

18. ஸிதார் தபேலா போன்ற வாத்தியங்களை உருவக்கியவர் துருக்கி நாட்டினைச் சேர்ந்தவர். யமன் கல்யாண், பூர்வி, பஹார் போன்ற இராகங்களை உருவாக்கி ஜால், திரிதால் போன்ற தாளங்களை அறிமுகப்படுத்தியவர்.
மேலே கூறப்பட்ட கூற்றுக்களுக்குப் பொருத்தமானவர்.
1) தான்சேன்
2) அமிர் குஸ்கு
3) பீதோவன்
4) மொஸாட்
5) பாக்

19. இலங்கையின் இசை வளர்ச்சியில் சிறு பாரம் பரியத்தைப் பிரதிபலிக்கும் பாடல் வகை அல்லாதது.
1) அரிவுவெட்டுப்பாடல் 2) கும்பி 3) மெல்லிசை
4) காவடி 5) கரகம்

20. 'இன்மை என் மனம்' என்ற பதவர்ணம் அமைந்துள்ள இராகம்.
1) சாருகேசி 2) தோடி 3) பைரவி 4) அம்சத்வனி 5) கானடா

21. வேத சக்கரத்தின் நேர்ப்பிரதி மத்திம சக்கரம்
1) வசு 2) ரிஷி 3) ருது 4) திஸி 5) பிரக்ம

22. "பாஹிமாம் ஸ்ரீ" என்ற சௌக்ககாலக் கிருதியை இயற்றியவர்.
1) மகாவைத்திய நாதையர் 2) பாபநாசம் சிவன் 3) முத்துத்தாண்டவர்
4) சேத்ரக்ஞர் 5) ஸ்வாதித் திருநாள்

23. ஒரு பாடலில் ஒரு சொல் ஒன்றுக்கு மேற்பட்ட பொருளுடன் பயன்படுத்தப்படும் அணி.
1) பகுத்துவம் 2) அனுப்பிராசம் 3) யமகம்
4) ஸங்கதி 5) மகுடஸ்வரம்

24. பிலிப்பைன்ஸ் நாட்டின் மிக உயர்ந்த விருதான "மக்சாசாய்" விருதினைப் பெற்றவர்.
1) M.S.சுப்புலக்சுமி 2) M.S.விஸ்வநாதன் 3) M.L. வசந்த குமாரி
4) மகாவைத்திய நாதையர் 5) வீணை பாலச்சந்தர்

25. தவராக மாலிகா வர்ணத்தில் முத்தாயிஸ்வரத்தில் அமைந்துள்ள இராகங்கள்.
1) கேதாரம், கல்யாணி 2) சங்கராபரணம், பிலகரி 3) கல்யாணி, பேகட
4) மோகனம் ஸ்ரீராகம் 5) ஆரபி, கல்யாணி

(25 புள்ளிகள்)

agaram.lk

## பகுதி II

❖ **பகுதி அ விலுள்ள எல்லா வினாக்களுக்கும் ஆ விலிருந்து இரு வினாவிற்கும் வினாக்களுக்கும் இ விலிருந்து இரு வினாக்களுக்கும் விடை தருக.**

### அ பகுதி

*01.*

1) மிஸ்ரஜாதி அடதாளத்தின் மொத்த எண்ணிக்கை யாது?
2) 72 மேளகர்த்தா சக்கரத்தில் விவாதி மேளங்கள் எத்தனை.
3) தாதுவின் அமைப்பில் கீதத்தினை ஒத்திருக்கும் உருப்படி யாது?
4) 10 வது சக்கரத்தின் பெயர் யாது?
5) வசந்தா இராகத்தின் தாய் இராகம் எது?
6) சியாமா சாஸ்திரிகளின் சொத்து எனப்படும் இராகம் எது?
7) ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள் கலந்து வரும் அணி எது?
8) கோட்டு வாத்தியம் வாசிப்பதில் பிரபல்யம் அடைந்த இரு கலைஞர்களின் பெயரினைத் தருக.
9) அமீர்குஸ்ருவால் உருவாக்கப்பட்ட இரு இசைக்கருவிகளைத் தருக.
10) இலங்கையில் இசை வளர்ச்சிக்குப் பங்காற்றிய நிறுவனங்கள் இரண்டினைத் தருக.
11) ஸ்வாதித் திருநாள் மகாராஜாவின் இரண்டு முத்திரைகளைத் தருக.

### "ஆ" பகுதி

02. 1) ஜனகராகத்தின் நான்கு இலட்சணங்களையும் தருக.
2) பின்வரும் ஜன்னிய இராக வகைகளை விளக்கி ஒவ்வொன்றிற்கும் இரண்டு உதாரணங்கள் தருக. ஆரோகணம், அவரோகனம் உட்பட)
உபாங்க ராகம்
பாஷாங்க ராகம்
வர்ஜ ராகம்

03. 1) 72 மேளச் சக்கரத்தில் 8 வது சக்கரம் யாது?
2) இச்சக்கரத்தில் இடம் பெறும் மேள இலக்கங்கள், இராகங்களின் பெயர்கள் தருக.
3) இராகங்களின் ஸ்வரஸ்தானங்களைத் தருக.

agaram.lk

04. பின்வரும் உருப்படிகளுள் ஒன்றினைத் தெரிவு செய்து விளக்கம் தருக.
1) சூளாதி        2) க்ருதி

### "இ" பகுதி

05. பின்வரும் இராகங்களில் ஒன்றிற்கு விரிவான லட்சணம் தருக. (சஞ்சாரம் உருப்படி உட்பட)
1) ஆனந்த பைரவி        2) வஸந்தா

06. 1) இராகத்தின் 10 லட்சணங்களும் எவை?
2) அவற்றினை உதாரணங்களுடன் விளக்கி எழுதுக.

07. நீர் கற்ற நவராக மாலிகா வர்ணத்தின் பூர்வாங்கப் பகுதியை ஸ்வர சாகித்திய தாள அங்கங்களுடன் எழுதுக.

08. 1) வயிற்றுடன் அனைத்துக் கொண்டு வாசிக்கப்படும் துணைத்தாள வாத்தியம் யாது?
2) அவற்றின் படத்தினை வரைந்து பாகங்களைக் குறிப்பிடுக.
3) அவற்றின் அமைப்பு, சிறப்பு, வாசிக்கும் முறை, வாசிப்பால் பிரபல்யம் அடைந்தோர் என்பவற்றினைத் தருக.

09. இலங்கையின் இசை வளர்ச்சி பற்றி கட்டுரை வரைக.